தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1974 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Police Academy.

* 451 *Q.* —THIRU N. **DENNIS**: Will the Hon. The **Chief** Minister be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to locate a Police Academy at Alamadi near Avadi; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகர் அருகே உள்ள அலமாதியில் காவலர் பயிற்சிக் கழகத்திற்காகக் கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்.—தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எப்பொழுது மேற்கொள்ளப்படும்? எப்பொழுது அந்த அக்காடமி அங்கு அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஐ. ஜி. அவர்களிடமிருந்து அதற்கான "பிரப்போசல்" இப்போதுதான் வந்து சேர்ந்திருக்கிறது. அவைகளையெல்லாம் ஆராய்ந்து பரிசீலித்து, விரைவில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, இப்பொழுது துவங்கப் பெற இருக்கும் காவலர் பயிற்சிக் கழகம் வேலூரில் இருக்கும் அளவுக்கு அமையுமா? பெண்கள் கூட இந்தப் பயிற்சிக் கழகத்தில் பயிலுவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேலூரில் இருக்கிற நிலையிலேயே இது அமைய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் விரும்ப மாட்டார் என்று நினைக்கிறேன். ஏனெனில், வேலூரில் இருக்கும் பயிற்சி நிலையத்தில் காற்று வசதி, மற்ற சுகாதார வசதிகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், அந்தப் பயிற்சி நிலையத்திற்கான கட்டடம் திப்பு சுல்தான் காலத்திலிருந்து இருந்து வருகிற பழைமையான கட்டடம் என்பதாலும், அவர்கள் நல்ல காற்றை சுவாசிப்பதற்கும் நல்ல திறந்த வெளியில் பயிற்சிகளைப் பெறுவதற்கும் ஏற்றவாறு அலமாதியில் இந்தப் பயிற்சிக் கழகத்தைத் தொடங்குவதாக இருக்கிறோம். காவல் துறையில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுகிற காரணத்தால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிய அவசியம் இருப்பதால் அந்த இடத்தில் அதையும் பயன்படுத்திக்கொள்வதற்கான சூழ்நிலை உருவாக இயலும்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, அமைக்கவிருக்கும் பயிற்சிக் கழகத்தில் மாமூலாகப் பயிற்சி சொல்லிக் கொடுப்பதுடன் மனோ தத்துவ முறை பயிற்சியும் அவர்களுக்குத் தரப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மனோ தத்துவப் பயிற்சி எதுவும் அங்கே அளிக்கப்படுவதில்லை இப்பொழுது “ கராத்தே ” என்ற வேறு ஒரு பயிற்சி காவல் துறையினரால் அளிக்கப்பட்டு வருகிறது. அதிலே ஓரளவு மனோதத்துவமும் அடங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

திரு. நா. வீராசாமி : முதலில் சொன்ன பதிலிலிருந்து வேலூரில் இருக்கக்கூடிய காவலர் பயிற்சிக் கழகத்திற்கு ஏதோ ஆபத்து இருப்ப தாக அறிகிறேன். அப்படி ஏதாவது ஆபத்து இருக்கிறதா ? அங்கிருக்கும் பயிற்சிக் கழகத்தை அங்கே தொடர்ந்திருக்க விட்டுவிட்டு மற்றொரு பயிற்சிக் கழகத்தை வேண்டுமானால் அலமாதியில் புதிதாகத் திறந்து அங்கும் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளிநாட்டிலிருந்து கூட இப்படிப் பட்ட பயிற்சி அளிக்க இங்கே சிலர் வருகிறார்கள். அவர்களுடைய அனுபவங்களையும் அந்த முகாமிலே பயன்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி வருகிறவர்கள் சென்னைக்கு வந்து, மறுபடியும் வேலூருக்குச் செல்வது என்பதெல்லாம் சிரமமான காரியமாக இருப்பதால், வேலூரிலிருந்து அதை அலமாதிக்கு மாற்றுவதற்கான திட்டம் இருக்கிறது. வேலூரில் ஆபத்து வருவதாக எண்ணத் தேவை இல்லை. வேலூரில் ஒரு பழைய கட்டடம் காலி செய்யப்படுகிறது என்று நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, துவக்கப்பட இருக்கிற அந்தப் பயிற்சிக் கழகத்தில் எத்தனை பேர் பயிற்சி பெற வழிவகை செய்யப்படுகிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது வேலூரில் கிட்டத் தட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் மூன்று பேர், டெபுடி சூப்பரின்டென்ட்கள் 4 பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் 185 பேர், சப்-இன்ஸ்பெக்டர் பதவி

1974 மார்ச் 16]

உயர்வு கிடைக்கப்பெறும் அசிஸ்டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்கள்-ஹெட்-கான்ஸ்டபிள்கள் **193** பேர் பயிற்சி பெறுகிறார்கள். இவர்கள்தான் அங்கே பயிற்சி பெறுவார்கள் என்பதல்ல. எண்ணிக்கையிலே கொஞ்சம் கூடுதல் குறைவு இருக்கலாம்.

Doubling of currency notes.

*** 452 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state :**

(a) whether Police personnel have been apprehended for doubling currency notes in Madras around 12th March 1973 ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ).—சென்னை பெரம்பூர் பாரக்ஸ் சாலையிலுள்ள ஒரு கடையின் சொந்தக் காரரை அவரது கடையில் முன்பின் தெரியாத ஒருவர் அணுகி **5** ரூபாய் நோட்டுக்களை இரட்டிப்பு செய்து கொடுப்பதாக வாக்களித்தார். பணத்தைக் கொடுக்க அந்த முன்பின் தெரியாத நபரை குறிப்பிட்ட ஓரிடத்தில் சந்திக்குமாறு கடைக்காரர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவ்வாறு குறிப்பிடப்பட்ட இடத்திற்குச் சென்று கடைக்காரர் பணத்தைக் கொடுக்கப்போகும் நேரத்தில், இரண்டு காவலர்கள் அந்த இடத்திற்கு வந்து கடைக்காரரைப் பிடித்துக்கொண்டனர் முன் பின் தெரியாத நபர் அந்த இடத்திலிருந்து மறைந்துவிட்டார். அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைக்காரர் புகார் செய்ததன் பேரில் அந்த இரண்டு காவலர்களும் கைது செய்யப்பட்டு, தாற்காலிகமாக வேலையி லிருந்து நீக்கி வைக்கப்பட்டார்கள். இரண்டு காவலர்களில் ஒருவர், **3—6—1973** அன்று நடந்த சாலை விபத்து ஒன்றில் இறந்து விட்டார். கடும் ஒழுங்கீன நடத்தைக்காக மற்றொருவர்மீது துறை அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு "டிஸ்மிஸ்" செய்யப்பட்டுள்ளார்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, காவலர்கள் இம்மாதிரி குற்றகரமான காரியங்களில் ஈடுபடுவதால், ரெக்ரூட் செய்யப்படும்போது, அல்லது அப்பாயின்ட்மெண்டுக்கு முன்னால், அவர்களுடைய நன்னடத்தை பற்றி சரியாக விசாரித்து அவர்களை ரெக்ரூட் செய்வதற்கும், ரெக்ரூட் செய்யப்பட்டு அவர்கள் வேலைக்கு அமர்ந்தபின் அவர்களுக்கு ஒழுங்கு முறைகளைப் பற்றி போதிக்கவும் வசதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உத்தியோகங்களில் இருப்பவர்களும் மனிதர்கள்தான். மனிதர்களில் எல்லோருமே எப்படிப்பட்டவர்கள் என்று முன்கூட்டியே அறிந்து அவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது முடியாத காரியம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சிலபேர் இப்படிப்பட்ட